**Dated : 18.02.2026**

**O.S.No. 473/2022**

**PW.1 – திரு. சீனிவாசன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் பர்கூரில் டெக்ஸ்டைல் பிஸ்னஸ் செய்கிறேன். என் கடை பெயர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா. இந்த கடையை யார் யார் நடத்துகிறோம் என்றால் நானும், என் தம்பி சென்னகேசவனும் நடத்துகிறோம். சென்னகேசவன் OS. 475/2022 என்ற வழக்கினை இதே நீதிமன்றத்தில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். என் கடையில் எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள் என்றால் 10 பேர் வேலை பார்க்கிறார்கள். நான் இந்த கடையை சுமார் 15 வருட காலங்களாக நடத்தி வருகிறேன். எனக்கும், எனது தம்பிக்கும் இந்த கடையிலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் என்னுடைய வருமான கணக்கில் ரூ.8,00,000/– அல்லது ரூ.10,00,000/– வருடத்திற்கு ஏற்றவாறு கட்டி வருகிறோம். நான் வருமான வரி செலுத்தி வருவதாக சொல்வது அந்த கடைக்கு தான் என்று சொன்னால் இல்லை, நாங்கள் தனியாகவும் வருமான வரி செலுத்துகிறோம். இந்த நீதிமன்றத்தில் நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்பதற்கான ஆதாரம் கொடுக்கவில்லை என்றால் தேவை என்றால் கொடுக்கிறேன்.

என்னுடைய Income Tax Written–ல் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்த விவரம் பற்றி காட்டியிருக்கிறேனா என்றால் காட்டியிருக்கிறேன், அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். இந்த பிரதிவாதிக்கு என் மனைவியின் மாமா பெண்ணை தான் திருமணம் செய்து கொடுத்திருக்கிறோம். 2019 டிசம்பரில் ஆவணத்தில் செல் வைத்து கொடுத்தார்கள். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டும் ஸ்டேம்ப் பேப்பரில் தான் இருவருமே கையொப்பமிட்டு கொடுத்தார்கள். இதில் சாட்சி கையொப்பமிட்டிருக்கும் நபர் எங்கள் கடையில் வேலை பார்த்தவர் தானா என்றால் அவ்வப்போது சீஷனில் வந்து வேலை பார்த்து கொடுத்துவிட்டு செல்வார். Ex.A1 முதல் Ex.A4 வரையிலான முதல் பக்கத்தில் காணப்படும் கையெழுத்தை போடுவதற்கு பயன்படுத்தப்பட்ட Ink–ம், 15.12.2019 தேதி செல் வைத்து கையொப்பமிட்டு கொடுத்ததாக சொல்லப்படும் Ink–க்கும் ஒன்றாகவே காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல, அது போல் எனக்கு தெரியவில்லை.

இந்த பாண்டில் செல் வைத்து கொடுத்தவர் யார் என்றால் M.C. வடிவேல் ஆவார், அவர் எனக்கு தூரத்து உறவினர். நான்கு பாண்டுகளிலுமே உள்ள கையெழுத்திற்கும், கடைசி வரிக்கும் நிறைய வித்தியாசம் காணப்படுகிறது என்றால் ஒரே மாதிரி இடைவெளி காணப்படவில்லை, அந்த கையொப்பங்கள் எல்லாம் அவர்கள் தான் போட்டுக்கொடுத்திருக்கிறார்கள். 2017ல் பாண்டில் கையெழுத்து வாங்கும் போது, பின்பக்கமும் சேர்த்து கையெழுத்து வாங்கிக்கொண்டுவிட்டு, அதை பூர்த்தி செய்துள்ளதால் இடைவெளி அதிகமாக காணப்படுகிறது என்றால் ஒவ்வொரு இடைவெளியும் ஒவ்வொரு மாதிரியாக தான் இருக்கிறது. செல்வைக்கும் போது பிரதிவாதிகளும், செல் எழுதிய வடிவேல் என்பவரை பிரதிவாதிகள் அழைத்து வந்தார்கள். வடிவேல் என்ன தொழில் செய்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

வடிவேல் என்பவருக்கு பாண்டு எழுதுவதற்கோ, செல் வைப்பதற்கோ ஏற்கனவே பழக்கம் இருந்ததா என்றால் தெரியாது. பாண்டு எழுதுவதற்கு வடிவேலுக்கு பழக்கம் உள்ளதா என்று நான் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. நான்கு புரோநோட்டுக்கள் மூலம் ரூ.20,00,000/- கடன் வாங்கியதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளது சரியா தவறா என்றால் அவர்கள் வீடு கட்டிக்கொண்டிருந்தால் கேட்டார்கள். அதே போல என் தம்பி சென்னகேசவனும் ரூ.20,00,000/- கடன் கொடுத்து நான்கு புரோநோட்டுக்கள் எழுதிக்கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் என்னுடைய சகோதரரும் ஒரே தேதியில் தான் எங்கள் வீட்டில் வைத்து பணம் கொடுத்தோம். அன்றைய தேதியில் ரூ.40,00,000/- கடன் கொடுத்தோம் என்றால் சரிதான். ரூ.40,00,000/- பணத்தை நாங்கள் வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தோமா என்றால் இல்லை.

என்னிடம் ரொக்கமாக ரூ.40,00,000/- பணம் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆதாரம் நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் அது போல எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எங்கள் இருவருக்குமே வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. இந்த பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லும் தேதியில் எங்கள் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் அதை கணக்கு பார்த்தால் தான் தெரியும். நான் ரூ.20,00,000/- பிரதிவாதிக்கு கடன் கொடுத்தது உண்மையல்ல, அவர் என்னிடம் எந்த கடனும் 2017ல் வாங்கவில்லை என்றால் நாங்கள் பல காலமாகவே பணம் கொடுத்து வாங்கல் செய்து வருகிறோம். 2017க்கு முன்னாள் இதே போல பிரதிவாதிக்கு பணம் கொடுத்து வாங்கியிருக்கிறோமா என்றால் இல்லை.

பிரதிவாதிகள் வேறு காரணத்திற்காக கொடுத்த வெற்று புரோநோட்டில் நாங்கள் அதை பூர்த்தி செய்துக்கொண்டு பொய்யாக ஒரு வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. இந்த தாவா தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.<br>LATHA V R Digitally signed by LATHA V R<br>Principal District Judge,<br>Krishnagiri. |